# செப்டம்பர் – 24 – திங்கள்

**புனித உபகார மாதா**

**“வெளிப்படாது மறைந்திருப்பது ஒன்றுமில்லை:**
**லூக். 8:17**

## முதல் வாசகம் : நீதி மொழிகள் 3 : 27 – 34

உன்னால் நன்மை செய்யக்கூடுமாயின், தேவைப்படுபவர்க்கு அந்த நன்மையைச் செய்யமறுக்காதே. அடுத்திருப்பார் உன்னிடம் கேட்கும்பொருளை நீ வைத்துக்கொண்டே, “போய்வா, நாளைக்குத் தருகிறேன்“ என்றுசொல்லாதே. அடுத்திருப்பார்க்கு தீங்கிழைக்கத் திட்டம் தீட்டாதே. அவர்கள் உன் அருகில் உன்னை நம்பி வாழ்கின்றவர்கள் அல்லவா? ஒருவர் உனக்கு ஒருதீங்கும் செய்யாதிருக்கும்போது, அவரை வீண்வாதத்திற்கு இழுக்காதே. வன்முறையாளரைக் கண்டு பொறாமை கொள்ளாதே. அவர்களுடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றாதே. ஏனெனில், நேர்மையற்றோரை ஆண்டவர் அருவருக்கின்றார் நேர்மையாளரோடு அவர் உறவுகொள்கின்றார். பொல்லாரது வீட்டின்மேல் ஆண்டவரது சாபம்விழும் அவருக்கு அஞ்சி நடப்போரின் உறைவிடங்களில் அவரது ஆசிதங்கும். செருக்குற்றோரை அவர் இகழ்ச்சியுடன் நோக்குவார் தாழ்நிலையில் உள்ளவர்களுக்கோ கருணை காட்டுவார்

**பதில்பாடல் :** ஆண்டவரே உம் திருமலையில் குடியிருப்பவர் யார்?

## நற்செய்தி : லூக்கா 8 : 16 – 18

அக்காலத்தில் மக்கள்“ கூட்டத்தினரை நோக்கி இயேசு கூறியதாவது: ”எவரும் விளக்கை ஏற்றி அதை ஒருபாத்திரத்தால் மூடுவதில்லை. கட்டிலின் கீழ் வைப்பதுமில்லை. மாறாக, உள்ளே வருவோருக்கு ஒளிகிடைக்கும்படி அதை விளக்குத்தண்டின் மீது வைப்பர். வெளிப்படாது மறைந்திருப்பது ஒன்றுமில்லை. அறியப்படாமலும் வெளியாகாமலும் ஒளிந்திருப்பதும் ஒன்றுமில்லை. ஆகையால், நீங்கள் எத்தகைய மனநிலையில் கேட்கிறீர்கள் என்பது பற்றிக் கவனமாயிருங்கள். உள்ளவருக்குக் கொடுக்கப்படும் இல்லாதவரிடமிருந்து தமக்கு உண்டென்று அவர் நினைப்பதும் எடுத்துக்கொள்ளப்படும்” என்றார்.

**தியானம்:** அறியப்படாமலும் வெளியாகாமலும் ஒளிந்திருப்பதும் ஒன்றுமில்லை.’’ வாழ்க்கை என்பது ஒரு நாடகமேடை என்றும், அதில் மனிதர்களாகிய நாம் நடிகர்கள் என்றும் பலர் கூறக் கேள்விப் பட்டிருக்கின்றோம். நடிகர்கள் கதைக்கு ஏற்றாற் போல் பாத்திரங்களை மாற்றி மாற்றி நடிப்பது போல, நாமும் சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப நமது சுய உருவத்தை மாற்றி மாற்றி வாழவேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருக்கலாம். நம் சொந்த வீடுகளில் ஒரு சுபாவத்துடனும், வேலைத்தளங்களில் வேறொருசுபாவத்துடனும், பொது இடங்களில் இன்னுமொரு சுபாவத்துடனும் நாம் நடந்து கொள்ள வேண்டிய நிலைக்கு நமது குடும்பமோ, வேலைகளோ, சமூகமோ நம்மைத் தள்ளியிருக்கலாம். மனித வாழ்க்கையை ஒரு ‘நாடகம்’ என்றோ, அல்லது ஒரு‘கனவு’ என்றோ பலவகையாக பலரும் வர்ணிக்கலாம். ஆனால், மனித வாழ்க்கை என்பது நிஜமான ஒன்று. அது கடவுள் நமக்கு அளித்த ‘வரம்’ என்பதையும் அந்த வாழ்க்கையை நாம் எவ்வாறு நேர்மையுடன் வாழ்ந்து அவரோடு ஒன்றிக்கமுடியும் என்பதையும் இன்றைய இறைவார்த்தைகள் நமக்குச் சொல்லித்தருகின்றன. எனவே, கடவுள் நமக்கு அளித்திருக்கும் ‘வாழ்க்கை’ எனும் கொடையை அவர் வழியிலேயே நேர்மையுடன் வாழ்வோம். அது விளக்குத் தண்டின் மேல் உள்ள விளக்குப் போல மற்றவர்களுக்கும் ஒளி கொடுக்கட்டும். நமது மனங்களை அறியும் வல்லமையுள்ள அவரே அதற்கேற்ற சன்மானத்தைத் தந்து நம்மை வழிநடாத்துவார்.